092/2026-T

Question Booklet Alpha Code **A**

Question Booklet Serial Number

Total No. of questions : 100 | Time : 1 Hour 30 Minutes

Maximum : 100 Marks

INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

092/2026-T

Maximum : 100 marks

Time : 1 hour and 30 minutes

1. பின்வருவனவற்றுள் சரியான இணை எது?

(A)	ஆரிய சமாஜம்	-	விவேகானந்தர்
(B)	பூனா சர்வஜனிக் சபை	-	எம்.ஜி. ரானடே
(C)	பிரார்த்தனை சமாஜம்	-	தேபேந்திரநாத் தாகூர்
(D)	ராமகிருஷ்ண மடம்	-	ராஜா ராம் மோகன் ராய்

2. வைக்கம் சத்தியாகிரகம் தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) வைக்கம் சத்தியாகிரகம் நடமாடும் சுதந்திரத்திற்காக நடத்தப்பட்டது

(ii) சவர்ண ஜாதா (Savarna Jatha) கே.பி. கேசவ மேனனால் ஏற்பாடு செய்யப்பட்டது

(iii) வைக்கம் சத்தியாகிரகத்திற்கு டி.கே. மாதவன் தலைமை தாங்கினார்

(A) (i), (iii) (B) (i), (ii)

(C) (ii), (iii) (D) (i), (ii), (iii)

3. 'சௌரி சௌரா' கிராமம் அமைந்துள்ள மாநிலம் :

(A) பீகார் (B) குஜராத்

(C) மகாராஷ்டிரா (D) உத்திரப் பிரதேசம்

4. 1929 லாகூர் காங்கிரஸ் மாநாடு தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) இது காங்கிரஸின் இறுதி இலக்காக 'பூரண சுவராஜ்யத்தை' (முழு சுதந்திரம்) அறிவித்தது.

(ii) ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது.

(iii) ஜனவரி 26, 1930-ஐ சுதந்திர தினமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

(A) (i), (iii) (B) (ii), (iii)

(C) (i), (ii) (D) அனைத்தும் சரி

5. யோகக்ஷேம சபையை உருவாக்குவதில் தலைமை தாங்கியவர் யார்?

(A) மன்னத்து பத்மநாபன் (B) வி.டி. பட்டதிரிப்பாடு

(C) டி.கே. மாதவன் (D) வாக்படானந்தன்

6. 'தி ஐவரி த்ரோன்' என்ற நூலை எழுதியவர் யார்?

(A) எம்.ஜி.எஸ். நாராயணன்

(B) மனு எஸ். பிள்ளை

(C) கே.கே.என். குருப்

(D) டாக்டர் விக்ரம் சம்பத்

7. கீழே கொடுக்கப்பட்டுள்ள உள்ளூர் காற்றுகளை அவை வீசும் பகுதிகளுடன் பொருத்துக :

	உள்ளூர் காற்று		பகுதி
(i)	லூ	(a)	ஐரோப்பாவில் உள்ள ஆல்ப்ஸ் மலைச்சரிவுகள்
(ii)	சினூக்	(b)	ஆப்பிரிக்காவில் உள்ள சஹாரா பாலைவனம்
(iii)	ஃபென்	(c)	வட அமெரிக்காவில் உள்ள ராக்கி மலைச்சரிவுகள்
(iv)	ஹார்மட்டன்	(d)	வட இந்தியச் சமவெளிகள்

(A) (i)-(b), (ii)-(d), (iii)-(a), (iv)-(c)

(B) (i)-(d), (ii)-(c), (iii)-(a), (iv)-(b)

(C) (i)-(c), (ii)-(a), (iii)-(d), (iv)-(b)

(D) (i)-(d), (ii)-(c), (iii)-(b), (iv)-(a)

8. அலைகளின் படிவுச் செயலால் கடற்கரைக்கு இணையாக உருவாகும் தற்காலிக மணல் திட்டுக்கள் :

(A) செங்குத்துப் பாறை (Cliff)

(B) கடல் தூண்

(C) மணல் திட்டு

(D) கடல் வளைவு

9. சூரியன் நிலநடுக்கோட்டிலிருந்து கடக ரேகைக்கு நகரும் காலம் :

(A) டிசம்பர் 22 முதல் மார்ச் 21 வரை

(B) ஜூன் 21 முதல் செப்டம்பர் 23 வரை

(C) செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 22 வரை

(D) மார்ச் 21 முதல் ஜூன் 21 வரை

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆறுகளை அவற்றின் துணை ஆறுகளுடன் சரியாகப் பொருத்துக :

	ஆறுகள்		துணை ஆறுகள்
(i)	பெரியார்	(a)	கஞ்சிரப்புழா
(ii)	பாரதப்புழா	(b)	மூழியார்
(iii)	பம்பை	(c)	முதிரப்புழா
(iv)	சாலியார்	(d)	துதப்புழா

(A) (i)-(c), (ii)-(a), (iii)-(d), (iv)-(b)

(B) (i)-(d), (ii)-(c), (iii)-(a), (iv)-(b)

(C) (i)-(c), (ii)-(d), (iii)-(b), (iv)-(a)

(D) (i)-(d), (ii)-(a), (iii)-(b), (iv)-(c)

11. பின்வரும் பகுதிகளில் எது நிலநடுக்கோட்டு காலநிலை மண்டலத்திற்குள் வராது?

(A) ஐரோப்பா
(B) மத்திய ஆப்பிரிக்கா
(C) தென்கிழக்கு ஆசியா
(D) அமேசான் படுகை

12. ஐக்கிய நாடுகள் சபையால் 'பனிப்பாறை பாதுகாப்புக்கான சர்வதேச ஆண்டு' ஆகக் கடைப்பிடிக்கப்பட்ட ஆண்டு எது?

(A) 2005
(B) 2018
(C) 2021
(D) 2025

13. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைக் (Economic Growth Rate) கணக்கிடுவதற்கான சரியான சூத்திரம் எது?

பொருளாதார வளர்ச்சி விகிதம் =

(A) $\dfrac{\text{நடப்பு ஆண்டின் (GDP) - முந்தைய ஆண்டின் GDP}}{\text{முந்தைய ஆண்டின் GDP}} \times 100$

(B) $\dfrac{\text{முந்தைய ஆண்டின் GDP} \times \text{நடப்பு ஆண்டின் GDP}}{\text{முந்தைய ஆண்டின் GDP}} \times 100$

(C) $\dfrac{\text{நடப்பு ஆண்டின் GDP}}{\text{மக்கள் தொகை}} \times 100$

(D) $\dfrac{\text{நடப்பு ஆண்டின் GDP} + \text{முந்தைய ஆண்டின் GDP}}{\text{முந்தைய ஆண்டின் GDP}} \times 100$

14. "உலகமயமாக்கல் என்பது ஒரு கொள்கை அல்ல, அது ஒரு நிகழ்வு" - இது யாருடைய கூற்று?

(A) டாக்டர் மன்மோகன் சிங்
(B) ஜவஹர்லால் நேரு
(C) அமர்த்தியா சென்
(D) கே.ஆர். நாராயணன்

15. பின்வருவனவற்றுள் எது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பணிகளில் அடங்காது?

(A) நாணயத் தாள்களை வெளியிடுதல்
(B) அரசுக்கான வங்கியாளராகச் செயல்படுதல்
(C) அந்நியச் செலாவணி விகிதங்களை ஒழுங்குபடுத்துதல்
(D) பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகையைப் பெறுதல்

16. சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவின் விவசாயத் துறையில் சமத்துவத்தை அடைய செயல்படுத்தப்பட்ட நில உச்சவரம்பு கொள்கை (Land Ceiling) தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) இது ஒரு தனிநபர் வைத்திருக்கக்கூடிய அதிகபட்ச நில அளவை நிர்ணயிப்பதைக் குறிக்கிறது.

(ii) நில உரிமையானது ஒரு சிலரின் கைகளில் குவிவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

(A) கூற்று (i) சரியானது
(B) கூற்று (ii) சரியானது
(C) கூற்றுகள் (i) மற்றும் (ii) சரியானவை
(D) கூற்றுகள் (i) மற்றும் (ii) தவறானவை

17. சிறு தொழில்கள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட கார்வே குழு எந்த ஆண்டில் அமைக்கப்பட்டது?

(A) 1956
(B) 1955
(C) 1950
(D) 1951

18. இந்தியாவில் பொருளாதார ஆய்வறிக்கையை (Economic Survey) தயாரித்து வெளியிடும் அமைப்பு எது?

(A) இந்திய ரிசர்வ் வங்கி
(B) நிதி ஆயோக்
(C) நிதி ஆணையம்
(D) நிதி அமைச்சகம்

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி (CEO) யார்?

(A) அனுராக் ஜெயின்
(B) பி.வி.ஆர். சுப்ரமணியம்
(C) அரவிந்த் பனகாரியா
(D) நரேந்திர மோடி

20. இந்திய அரசியலமைப்பின் "இதயம் மற்றும் ஆன்மா" என்று டாக்டர் அம்பேத்கர் எந்த அடிப்படை உரிமையைக் குறிப்பிட்டார்?

(A) சமத்துவ உரிமை

(B) சுரண்டலுக்கு எதிரான உரிமை

(C) அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை

(D) சமய சுதந்திர உரிமை

21. இந்திய அரசியலமைப்பின் எந்தப் பகுதியில் 'அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்' சேர்க்கப்பட்டுள்ளன?

(A) பகுதி III
(B) பகுதி IV
(C) பகுதி II
(D) பகுதி VII

22. எந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் 'சொத்துரிமை' அடிப்படை உரிமையல்லாததாக மாற்றப்பட்டது?

(A) 42
(B) 48
(C) 44
(D) 61

23. இந்திய அரசியலமைப்பின் எந்தப் பட்டியலின் கீழ் 'கல்வி' சேர்க்கப்பட்டுள்ளது?

(A) மத்தியப் பட்டியல்
(B) மாநிலப் பட்டியல்
(C) பொதுப் பட்டியல்
(D) இவற்றில் எதுவுமில்லை

24. கேரள மாநிலத்தின் தற்போதைய தலைமைத் தேர்தல் அதிகாரி யார்?

(A) ஏ. ஷாஜஹான்
(B) வி. பாஸ்கரன்
(C) என். சேஷாத்ரிநாதன்
(D) எம்.எஸ். ஜோசப்

25. இந்திய அரசியலமைப்பிற்கான 'அடிப்படை கடமைகள்' என்ற கருத்துரு எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டது?

(A) பிரிட்டன்
(B) கனடா
(C) U.S.A.
(D) U.S.S.R.

26. இந்தியாவின் தற்போதைய துணை ஜனாதிபதி யார்?

(A) எம். வெங்கையா நாயுடு
(B) சி.பி. ராதாகிருஷ்ணன்
(C) ஜகதீப் தன்கர்
(D) ஓம் பிர்லா

27. கேரளாவின் முதல் மசூதி எது?

(A) மலப்புரம் மசூதி
(B) சேரமான் ஜுமா மசூதி
(C) பாலையூர் மசூதி
(D) பொன்னானி மசூதி

28. 'முஜிரிஸ்' துறைமுகம் இன்று எங்கு அமைந்துள்ளது?

(A) கோழிக்கோடு
(B) கொச்சி
(C) கொடுங்கல்லூர்
(D) கண்ணூர்

29. சட்டம்பி சுவாமிகளின் இயற்பெயர் என்ன?

(A) நாராயணன்
(B) குஞ்சன் பிள்ளை
(C) அய்யப்பன்
(D) ராமன்

30. கேரளாவில் முதல் ஆங்கிலப் பள்ளி எங்கு நிறுவப்பட்டது?

(A) கோழிக்கோடு
(B) திருவனந்தபுரம்
(C) கோட்டயம்
(D) கொச்சி

31. கேரளாவில் முதல் ரயில் பாதை எங்கு அமைக்கப்பட்டது?

(A) கொச்சி - திருவனந்தபுரம்
(B) திரூர் – பேப்பூர்
(C) கோழிக்கோடு – கண்ணூர்
(D) கோட்டயம் – எர்ணாகுளம்

32. 2023-ல் கேரள அரசால் தொடங்கப்பட்ட K-FON திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன?

(A) விவசாய மேம்பாடு
(B) இலவச இணைய வசதி வழங்குதல்
(C) சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்
(D) சுற்றுலாவை ஊக்குவித்தல்

33. 2024-ல் ISRO மூலம் வெற்றிகரமாக ஏவப்பட்ட புதிய ராக்கெட் எது?

(A) PSLV-C58
(B) GSLV MK III
(C) SSLV
(D) ASLV

34. வைட்டமின் B1 குறைபாட்டினால் ஏற்படும் நோய் :

(A) ரிக்கெட்ஸ்
(B) பெரிபெரி
(C) மாலைக்கண் நோய்
(D) ஸ்கர்வி

35. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் புற்றுநோய் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் திட்டம் :

(A) ஆர்த்ரம்
(B) தாலோலம்
(C) சுக்ருதம்
(D) அஸ்வமேதம்

36. எய்ட்ஸ் (AIDS) நோயை உண்டாக்கும் கிருமி :

(A) HIV (எச்.ஐ.வி.)
(B) HBV (எச்.பி.வி.)
(C) HCV (எச்.சி.வி.)
(D) ரைனோவைரஸ்

37. Reduce, Reuse, Recycle என்ற கோட்பாடு எதனுடன் தொடர்புடையது?

(A) காடழிப்பு
(B) நீர்ப்பாசனம்
(C) சுரங்கத் தொழில்
(D) கழிவு மேலாண்மை

38. 2026-ஆம் ஆண்டிற்கான உலக சுற்றுச்சூழல் தினத்தை நடத்தும் நாடு :

(A) அஜர்பைஜான்
(B) தென் கொரியா
(C) சவூதி அரேபியா
(D) ஸ்வீடன்

39. மனித உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பு :

(A) கல்லீரல்
(B) இதயம்
(C) தோல்
(D) நுரையீரல்

40. உடல் பருமனைத் தீர்மானிக்கப் பயன்படும் குறியீடு :

(A) ECG (இ.சி.ஜி.)
(B) BMI (பி.எம்.ஐ.)
(C) EEG (இ.இ.ஜி.)
(D) FBS (எப்.பி.எஸ்.)

41. புவி வெப்பமடைதலுக்குக் காரணமான முதன்மையான வாயு :

(A) ஆக்ஸிஜன்
(B) நைட்ரஜன்
(C) ஹைட்ரஜன்
(D) கார்பன் டை ஆக்சைடு

42. பாலைவனத்தில் நடந்து செல்லும் ஒருவர் தொலைவில் பசுமையைக் காண்கிறார். 'கானல் நீர்' என்று அழைக்கப்படும் இந்நிகழ்விற்குக் காரணமான ஒளி நிகழ்வு ________ ஆகும்.

(A) எதிரொளிப்பு
(B) விலகல்
(C) முழு அக எதிரொளிப்பு
(D) விளிம்பு விளைவு

43. பின்வருவனவற்றில் சரியான கூற்று/கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) நிலையான மின்னூட்டங்கள் மின்காந்த அலைகளை உருவாக்குகின்றன.

(ii) ஒரு ஊடகத்தின் வழியாக மின்காந்த அலைகளின் வேகம் $V = \frac{1}{\sqrt{\mu \in}}$

(iii) ஒளி ஒரு மின்காந்த அலையாகும்.

(iv) வெற்றிடத்தில் ஒளியின் வேகத்தை அதன் அலைநீளம் மற்றும் அதிர்வெண்ணை மாற்றுவதன் மூலம் மாற்றியமைக்கலாம்.

(A) (i) & (ii)
(B) (ii) & (iii)
(C) (iii) & (iv)
(D) (i), (ii), (iv)

44. ஒலி மற்றும் ஒளி அலைகளை ஒப்பிட்டுச் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

(i) இரு வகை அலைகளும் வெற்றிடத்தின் (விண்வெளி) வழியாகப் பயணிக்க முடியும்

(ii) குறுக்கீட்டு விளைவு மற்றும் விளிம்பு விளைவு போன்ற நிகழ்வுகள் இரண்டிலும் ஏற்படுகின்றன

(iii) தளவிளைவு (போளரைசேஷன்) ஒளியில் மட்டுமே நிகழ்கிறது

(iv) ஒளி ஒரு குறுக்கலை (ட்ரான்ஸ்வெர்ஸ் வேவ்), ஆனால் ஒலி ஒரு நெட்டலை (longitudinal wave) ஆகும்

(A) (i), (ii), (iii)
(B) (ii), (iii), (iv)
(C) (i), (ii), (iii), (iv)
(D) இவை ஏதுமில்லை

45. இந்தியாவின் முதல் தனியார் சுற்றுப்பாதை விண்வெளிப் பயணத் திட்டத்தின் பெயர் :

(A) மிஷன் ஆகமன்
(B) விக்ரம்-1
(C) ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்
(D) மிஷன் ப்ரித்வி

46. மலையாளியும் நாசா விஞ்ஞானியுமான டாக்டர் அனில் மேனன் எந்த விண்வெளிப் பயணத் திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தார்?

(A) ராஸ்கோஸ்மோஸ்-2
(B) நாசா 2026
(C) எக்ஸ்பிடிஷன்-24
(D) இவற்றில் எதுவுமில்லை

47. இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயிலான 'நமோ கிரீன்'-இல், மின்சாரத்தை உருவாக்கும் எரிபொருள் கலத்திலிருந்து வெளியேறும் துணைப்பொருள் எது?

(A) ஆக்ஸிஜன் (B) நீராவி

(C) ஹைட்ரஜன் (D) கார்பன் டை ஆக்சைடு

48. MDMA என்ற வேதி மருந்தின் வேதியியல் பெயர் :

(A) 3, 4 – மெத்திலின்டைஆக்ஸி-மெத்தாம்ஃபெடாமைன்

(B) 3, 4 – மெத்திலின்டையமின்-மெத்தாம்ஃபெடாமைன்

(C) 3, 4 – மீத்தைல்டையாக்சி-மெத்தாம்ஃபெடாமைன்

(D) 3, 4 – மீத்தைல்டையாமின்-மெத்தாம்ஃபெடாமைன்

49. வெண்கலத்தில் உள்ள d-block தனிமம் எது?

(A) அலுமினியம் (B) செம்பு

(C) ஈயம் (D) இரும்பு

50. மனித இரத்தத்தின் pH மதிப்பு பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கக்கூடும்?

(A) 6.25 (B) 8.32

(C) 7.42 (D) 10.25

51. மாறாத வெப்பநிலையில், ஒரு வாயு 2 atm அழுத்தத்தில் 4 லிட்டர் கனஅளவைக் கொண்டுள்ளது. அதன் கனஅளவை 2 லிட்டராகக் குறைக்க, அழுத்தம் எவ்வளவு இருக்க வேண்டும்?

(A) 4 (B) 2

(C) 8 (D) 6

52. கலாமண்டலம் ஹைதரலி எந்தத் துறையில் புகழ் பெற்றார்?

(A) மத்தளம் (B) செண்டை

(C) கதகளி சங்கீதம் (D) இடக்கா

53. மலையாளி விளையாட்டு வீராங்கனை திவி பிஜேஷ் எந்தத் துறையில் சிறந்து விளங்கினார்?

(A) சதுரங்கம் (B) ஹாக்கி

(C) கைப்பந்து (D) கபடி

54. குட்டிக்கிருஷ்ண மராரின் 'பாரதபர்யடனம்' என்ற படைப்பு எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?

(A) சுயசரிதை (B) மகாபாரத ஆய்வு
(C) பயணக் குறிப்பு (D) நாடகம்

55. அத்தச்சமயம் ஊர்வலத்திற்குப் புகழ்பெற்ற இடம் எது?

(A) இரிஞ்சாலக்குடா (B) ஓச்சிரா
(C) திருவில்லாமலை (D) திரிப்பூணித்துறா

56. 'விருத்தாந்த பத்திர பிரவர்த்தனம்' என்ற நூலை எழுதியவர் யார்?

(A) சுதேசாபிமானி ராமகிருஷ்ண பிள்ளை
(B) கே.பி. கேசவ மேனன்
(C) எம்.டி. வாசுதேவன் நாயர்
(D) கண்டத்தில் வர்கீஸ் மாப்பிள்ளை

57. 'பிரமயுகம்' திரைப்படத்திற்காக சிறந்த ஒளிப்பதிவுக்கான தேசிய விருதை வென்றவர் யார்?

(A) கிரீஷ் கங்காதரன் (B) ஜோமோன் டி. ஜான்
(C) அமல் நீரத் (D) ஷெஹ்னாத் ஜலால்

58. 2026 ஃபிஃபா (FIFA) உலகக் கோப்பையில் போட்டியிடும் மிக இளம் வயது வீரர் :

(A) கில்பெர்டோ மோரா (B) ஜூனியர் நெய்மர்
(C) நார்மன் வைட்சைடு (D) மரடோனா

59. கணினியின் நிரந்தர நினைவகம் (permanent memory) என்று அழைக்கப்படுவது எது?

(A) கேச் மெமரி (B) ராம் (RAM)
(C) ஹார்டு டிஸ்க் (D) பிராஸஸர்

60. இந்தியன் IT சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு :

(A) 2005 (B) 2000
(C) 1999 (D) 2002

61. இணையத்தில் தகவல்களைத் தேடப் பயன்படும் Google மற்றும் Bing போன்ற அமைப்புகளுக்கு வழங்கப்படும் பெயர் :

(A) வெப் பிரௌசர் (B) ஃபிஷிங்
(C) ஸார்டிங் (D) சர்ச் என்ஜின்

62. ஒரு வலைப்பக்கத்தின் அடிப்படை கட்டமைப்பு உருவாக்கத்தில் எந்தக் tag இடம்பெறாது?

(A) <HEAD> (B) <BODY>
(C) <HTML> (D) <TAIL>

63. ஒரு கணினி அல்லது நெட்வொர்க்குள் அத்துமீறி நுழைவது என்பது :

(A) ஃபிஷிங் (B) ஹேக்கிங்
(C) ஃபயர்வால் (D) பிரிட்ஜிங்

64. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இன் பிரிவு 18-ன் கீழ் ஒரு புகார் குறித்து விசாரிக்கும்போது, தகவல் ஆணையம் பின்வரும் உரிமையியல் நீதிமன்ற அதிகாரங்களில் எதைக் கொண்டுள்ளது?

(A) நபர்களை நேரில் வரவழைத்து, கட்டாயப்படுத்தி, வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ சாட்சியம் அளிக்கச் செய்யும் அதிகாரம்

(B) பணத்தை மீட்டெடுப்பதற்கான தீர்ப்பை (decree) வழங்கும் அதிகாரம்

(C) பொது அதிகார அமைப்புகள் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை வழங்கும் அதிகாரம்

(D) விதிமீறலில் ஈடுபடும் நபர்களுக்குச் சிறைத் தண்டனை அளிக்கும் அதிகாரம்

65. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன் படி பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) ஒவ்வொரு நுகர்வோருக்கும் பொருட்கள் அல்லது சேவைகளின் தரம், அளவு, வீரியம், தூய்மை, தரம் (standard) மற்றும் விலை ஆகியவை குறித்துத் தெரிந்துகொள்ளும் உரிமை உண்டு.

(ii) ஒவ்வொரு நுகர்வோருக்கும் நுகர்வோர் விழிப்புணர்வுக்கான உரிமை உண்டு.

(iii) இந்தியாவில் விற்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் வாழ்நாள் உத்தரவாதம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் உரிமை ஒவ்வொரு நுகர்வோருக்கும் உண்டு.

(iv) நியாயமற்ற வணிக நடைமுறைகள் அல்லது கட்டுப்பாட்டு வணிக நடைமுறைகளுக்கு எதிராகத் தீர்வு கோரும் உரிமை ஒவ்வொரு நுகர்வோருக்கும் உண்டு.

(A) (i), (ii), (iii) மற்றும் (iv)

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

66. 2005-ஆம் ஆண்டின் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவு 3-ன் கீழ், பின்வருவனவற்றுள் எது குடும்ப வன்முறையாகக் கருதப்படுகிறது?

(A) ஒரு பெண்மணிக்கு அண்டை வீட்டார் பணம் கடன் கொடுக்க மறுப்பது

(B) துணைவர்களுக்கிடையே அரசியல் கருத்துகளில் ஏற்படும் கருத்து வேறுபாடு (துஷ்பிரயோகம் அல்லது கட்டாயப்படுத்துதல் இல்லாமல்)

(C) புகாரளிக்கும் பெண்மணிக்கு உரிமையுள்ள நிதி வளங்களை அவருக்கு மறுப்பது

(D) பெண் வசிக்கும் கட்டிடத்தின் உரிமையாளர் வாடகையை உயர்த்துவது

67. 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' (One Nation One Election) முறையைச் செயல்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு (129-வது திருத்த) மசோதாவின் முதன்மை நோக்கம் என்ன?

(A) அனைத்து மாநிலங்களிலும் உள்ள சட்ட மேலவைகளை ஒழித்தல்

(B) மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(C) நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலத்தை ஏழு ஆண்டுகளாக நீட்டித்தல்

(D) அனைத்துத் தேர்தல்களுக்கும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகப்படுத்துதல்

68. 2025-ஆம் ஆண்டின் வக்பு (திருத்தச்) சட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?

(A) அனைத்து மாநில வக்பு வாரியங்களையும் ஒழித்தல்

(B) அனைத்து வக்பு சொத்துகளையும் தேசியமயமாக்குதல்

(C) வக்பு சொத்துகளின் நிர்வாகத்தை உச்ச நீதிமன்றத்திடம் ஒப்படைத்தல்

(D) தற்போதுள்ள வக்பு சட்டத்தைத் திருத்துவதன் மூலம் வக்பு சொத்துகளின் நிர்வாகம் மற்றும் மேலாண்மையைச் சீர்திருத்துதல்

69. பின்வரும் சட்டங்களில் எதன் கீழ் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டது?

(A) குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955

(B) மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993

(C) தேசிய மனித உரிமைகள் ஆணையச் சட்டம், 1990

(D) தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

70. 2012-ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் (POCSO) கீழ் குழந்தையின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வது தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எது தவறானது?

(A) குழந்தையின் வாக்குமூலத்தை, உதவி ஆய்வாளர் பதவிக்குக் குறையாத நிலையில் உள்ள ஒரு பெண் காவலர் பதிவு செய்ய வேண்டும்; இது குழந்தையின் இல்லம், குழந்தை வழக்கமாக வசிக்கும் இடம் அல்லது குழந்தை விரும்பும் இடம் ஆகியவற்றில், நடைமுறைக்குச் சாத்தியமான வரையில் மேற்கொள்ளப்பட வேண்டும்

(B) குழந்தையின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்போது காவலர் சீருடை அணிந்திருக்கக்கூடாது

(C) எந்தச் சூழ்நிலையிலும், பகலோ அல்லது இரவோ, ஒரு குழந்தையை காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கக்கூடாது

(D) குழந்தையிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கும்போது, அக்குழந்தை எந்தச் சூழ்நிலையிலும் குற்றம் சாட்டப்பட்டவருடன் தொடர்புகொள்ளாதவாறு விசாரணை அதிகாரி உறுதிசெய்ய வேண்டும்

71. ஒரு மேஜை ரூ. 600-க்கு விற்கப்பட்டபோது 20% நஷ்டம் ஏற்பட்டது. அந்த மேஜையின் அடக்க விலை என்ன?

(A) 600 (B) 650
(C) 700 (D) 750

72. $\frac{3}{4}, \frac{5}{6}, \frac{2}{3}$ இவற்றில் மிகப்பெரிய பின்னம் எது?

(A) $\frac{3}{4}$ (B) $\frac{5}{6}$
(C) $\frac{2}{3}$ (D) அனைத்தும் சமம்

73. ரூ. 6,000-க்கு ஆண்டுக்கு 10% வட்டி விகிதத்தில் 2 ஆண்டுகளுக்குக் கிடைக்கும் தனி வட்டி எவ்வளவு?

(A) 1,200 (B) 1,000
(C) 1,500 (D) 2,000

74. ஒரு எண்ணின் 30% என்பது 60 எனில், அந்த எண்ணின் 20% எவ்வளவு?

(A) 120 (B) 40
(C) 180 (D) 50

75. முதல் 7 இயல் எண்களின் சராசரி என்ன?

(A) 4 (B) 3.5
(C) 2 (D) 3

76. விடுபட்ட எண்ணைக் கண்டறியவும் :
2, 4, 8, 16, 32, ____

(A) 40 (B) 48
(C) 64 (D) 50

77. பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

(A) ஜனவரி (B) மார்ச்
(C) ஏப்ரல் (D) மே

78. ஒரு ரகசிய மொழியில் 'BAG' என்பது 'CBH' எனக் குறிக்கப்பட்டால், 'BOOK' என்பது எவ்வாறு குறிக்கப்படும்?

(A) PLCP (B) PCCL
(C) LCCP (D) CPPL

79. வரிசையை நிறைவு செய்க :
B, D, F, H, _____

(A) I (B) J
(C) K (D) L

80. பறவை : வானம் : : மீன் : _________

(A) காடு (B) நீர்
(C) கூடு (D) பூமி

81. If I were you, I __________ smoking.

(A) would quit (B) will have quit
(C) may quit (D) will quit

82. "Do not _________ me in front of my friends".

(A) embbaras (B) embarrase
(C) embarrass (D) embarass

83. His spontaneous trip required a _________ budget.

(A) deliberate (B) plain
(C) rehearsed (D) calculated

84. A person who writes with bad handwriting or incorrect spelling is a _________.

(A) Calligraphist (B) Cacographist
(C) Cartographist (D) Cryptographist

85. She was sitting __________ the pool and reading a book.

(A) on (B) in
(C) into (D) beside

86. The corrected sentence for :
"Every of the student have their own laptop" is

(A) Each of the students has their own laptops
(B) Every student have their own laptops
(C) Each of the students have their own laptops
(D) Every of the students has his own laptop

87. The new employee was _________ during her first week on the job.

(A) under the weather (B) at sea
(C) out of the woods (D) barking up the wrong tree

88. "He swallowed his self-respect and apologized". The word 'self-respect' can be replaced with :

(A) amour propre (B) mon amour
(C) primier amour (D) amour fou

89. He said, "You saw me see you."
This can be reported as

(A) He said that he saw me see him
(B) He said that he saw him see me
(C) He said that I had seen him see me
(D) He said that I saw him see me

90. ________ my father __________ his brother were born in Canada.

(A) Neither - nor (B) Both - and
(C) Either - or (D) Whether - or

91. எதிர்ச்சொல் எழுதுக – பொய்மை :

(A) நன்மை
(B) வாய்மை
(C) உண்மை
(D) தூய்மை

92. கீழ்காணும் சொற்களில் ஒருமையைக் குறிக்கும் சொல் எது?

(A) மக்கள்
(B) மாணவர்கள்
(C) புத்தகம்
(D) புத்தகங்கள்

93. வேட்கை என்னும் சொல்லின் பொருள் யாது?

(A) விருப்பம்
(B) தாகம்
(C) பசி
(D) தூக்கம்

94. வாசகன் – ஆண்பால்

? – பெண்பால்

(A) வாசகர்
(B) வாசகி
(C) வாசுகி
(D) வாசகம்

95. பெண் + எழுத்தாளர் – சேர்த்தெழுது

(A) பெண்ணெழுத்தாளர்
(B) பெண்ணாளர்
(C) பெண்ணெழுத்தர்
(D) பெண்எழுத்தாளர்

96. உள்ளல் – பொருள் எழுதுக :

(A) பார்த்தல்
(B) பேசுதல்
(C) பழகுதல்
(D) நினைத்தல்

97. 'Passport' – என்ற ஆங்கிலச் சொல்லின் - தமிழாக்கம் :

(A) அடையாள அட்டை
(B) புத்தகம்
(C) கடவுச்சீட்டு
(D) டிக்கெட்

98. அரவு என்பது எந்த உயிரினம்?

(A) பாம்பு
(B) பல்லி
(C) தேள்
(D) தவளை

99. பிரித்து எழுது - சுற்றுச்சூழல்

(A) சுற்றுச் + சூழல்
(B) சுற்றும் + சூழல்
(C) சுற்றம் + சூழல்
(D) சுற்று + சூழல்

100. செல்லும் வரை, கண்விழிப்பதிலிருந்து உறங்கச், காலையில், இணையம். ஆக்கிரமித்துள்ளது, இரவு, நம்மை, இச்சொற்களை ஒழுங்காக அமைத்து வாக்கியமாக்கவும் :

(A) காலையில் கண்விழிப்பதிலிருந்து இரவு உறங்கச் செல்லும் வரை நம்மை இணையம் ஆக்கிரமித்துள்ளது

(B) ஆக்கிரமித்துள்ளது உறங்கச் செல்லும்வரை இணையம் கண் விழிப்பதிலிருந்து இரவு காலையில் நம்மை

(C) இரவு ஆக்கிரமித்துள்ளது நம்மை செல்லும் வரை இணையம் காலையில் கண் விழிப்பதிலிருந்து உறங்க

(D) நம்மை இணையம் உறங்கச் செல்லும் வரை காலையில் கண் விழிப்பதிலிருந்து ஆக்கிரமித்துள்ளது இரவு

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK